


# எனக்குள்ளே...

-சிதறல்களின் சேர்க்கை-

வெளியீடு : உறவுகளின் கூடாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குள்ளே...

- சிதறல்களின் சேர்க்கை -

தொகுப்பு
எஸ் . சுடரவன்

வெளியீடு : உறவுகளின் கூடாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு : எஸ் . சுடரவன்

பதிப்பு : பெப்ரவரி ௨00௮

பக்கங்கள் : ௫௬

வடிவமைப்பு : எஸ். சுடரவன்

அட்டைப்படம் : கே. சுகந்தமாறன்

பிரதிகள் : ௨00

வெளியீடு : உறவுகளின் கூடாரம்

தொடர்புகளுக்கு : sudaravan@yahoo.com

எஸ்.நிரோஜன்

M.1/5, சொய்சா தொடர்மாடி

மொரட்டுவை.

எனது அன்பினிய ஆசை அக்கா நிசாவிந்து...

எஸ். சுடரவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குள்ளே பற்றி............

இதயத்தின் ஆழத்தின் துடிப்புக்களோடு சங்கமித்து அடிநாதத்தில் குமிழ் முனைப்பேனா தொட்டு எழுதிய வரிகளெல்லாம் வெறும் வார்த்தைகளாகவே தூங்கிக்கொண்டிருந்தன. இது வரிகளை எழுதிய வாலிபங்களின் ஏக்கம். ஏக்கத்திற்குத் தூக்கம் கொடுக்கத் துடித்தன எங்கள் வாலிபங்கள். அங்கொன்றும், இங்கொன்றுமாக சிதறிய வார்த்தைகளை எல்லாம் பல பகலிரவுப் பொழுதுகள் பொறுக்கியெடுத்து பக்குவப்படுத்துவதில் சில காலங்கள் கரைபுரண்டோடிவிட்டன. வரிகள் எல்லாமே எங்கள் வாலிபங்களுக்குள்ளே மறைந்திருந்த வலிகள் தான். இதன் ஜனனம் எனக்குள்ளே....

முதல் முயற்சியாக மூச்சுடன் உங்கள் கைகளில் தவழும் "எனக்குள்ளே..." சிதறல்களுக்காக என்னுடன் கரங்கோர்த்த நண்பர்கள் அருள்நேசன் சுகந்தமாறனுடன் சக நண்பர்களுக்கும் என் இனிய நன்றிகள்.

அன்புடன்

எஸ். சுடரவன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எனக்குள்ளே...


☞ எனக்குள்ளே 1
☞ சுதந்திரப் பறவைகள் 5
☞ கன்னிப்பருவம் 7
☞ காதல் காதல் மட்டுமேயல்ல 8
☞ அம்மா 11
☞ சகாரவின் புன்னகை 13
☞ நெஞ்சமே என்ன வழி உனக்கு 15
☞ விருப்பமில்லாத விதி 17
☞ வேரோடும் துயரம் 19
☞ காலாசாரக் கழிவுகள் 21
☞ நிஜம் காணாத வரலாறும் அர்த்தமற்ற வாழ்வும் 23
☞ ஜனனம் 25
☞ வேடந்தாங்கல் 28
☞ ஒளி தரும் உயிர்த்திரி 30
☞ அடுத்த வாசல் 33
☞ எனது பட்டப்படிப்பு 35
☞ தூக்கம் 37
☞ மரணித்துப் போகாத மரணம் 39
☞ கடலின் மக்கள் 42
☞ இருப்பிடத்தை நோக்கிய பயணம் 45
☞ வண்ண மழையே 49
☞ என் கடவுளைத் தேடுகிறேன் 52
☞ நட்பின் பிரிவில் சில கணங்கள் 55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனக்குள்ளே.........

எஸ். சுடரவன்

என் இதய அறைகளை
கூரிய வாள்கொண்டு குத்திக்கிழித்தபோது
பீறிட்டு எழுந்த குருதி
உன் கண்களைக்
குருடாக்கியதை மறந்துவிடாதே...
கணிப்புக்கள்
தப்பாக போகாதென்ற மமதை
மீளவும் மனதில்
ஒரு தடவை ஒலி எழுப்பிற்று...
என் மார்புகளைத் தட்டி மகிழ்ந்தேன்.
நீ கூட அதற்கு சாட்சியானாய்.
உன் கணக்கு
தப்பிப்போனதையும்
தலை சுற்றியதையும்
வெட்கித் தலைகுனிந்ததையும்

நான் அறிவேன்.

இருந்தும்,

அறியாதவன் போல் நடித்தேன்.

நடிப்பில்

முதிர்ந்த அனுபவங்கள்

எனக்குள்ளே புதைந்து கிடந்தது ...

உன் முதலைக் கண்ணீர்

என்னை முட்டாளாக்கிவிடுமென

எண்ணிவிடாதே...

அந்தக் கண்ணீரையே

பன்னீராக்கி

பணம் சேர்க்கும்

படிப்பினை

உன்னிடமிருந்தே கற்றுக்கொண்டேன்...

சேதி ஒன்று சொல்ல

நீண்ட நாட்களாக

சிறு வயது முதலாய்

அடிமனதில் ஆதங்கம்.

நேரம், இப்போது தான்

நேரம் ஒதுக்கியிருக்கிறது எனக்காக...

உந்தன் சகோதரர் பலரும்

என் இரத்தக் குழாய்க் கண்களுக்கு

கறுத்தக் கண்ணாடி

பூட்டினார்கள்.

என் கண்ணீர்த்துளிகள்

வற்றிப்போகும் அளவு

அவற்றிற்குத் திருகு

பிணைக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈட்டிகளால் - என்
முள்ளந்தண்டு நரம்புகளை
கிழித்தெறிந்தனர்.
என் குருதி
பூமியைத் தொட அனுமதி மறுத்து
உறிஞ்சிக் குடிக்கப்பட்டிருந்தது.
இதன் சோகங்கள்
உனக்கும் தெரியும்
நான் அடைந்த
வேதனையும் புரியும்.

நாள் தொடங்கும் போது
அந்த வலிகள்
தீ காட்டி
வெதவெதப்பேற்றுப்படுகிறது.
என் பிள்ளைகளுக்கும்
அதன் தழும்புகளைக்
காட்டி காரணங்களைச்
சொல்லிக் கொடுக்கிறேன்.
கால ஓட்டத்தில்
என்னை அதிஸ்டகாரனாக
எண்ணிக்கொள்கிறேன்.
காரணம்
காயம்பட்ட இதயமும்
நையப்புடையுண்ட நரம்புகளும்
புதிதாக பிரதியிடப்பட்டன ...
அவை செப்பன இயங்குவதாக
சான்றுப்பத்திரம் சாற்றுகிறது.
தொழில்நுட்பம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வான வரப்புக்கள்
கடந்து வளர்ந்துவிட்டது.
இதை மறந்துவிட்டாயென எண்ணுகிறேன்
இவற்றை உன் நினைவிருத்திக்கொள்...

தசாப்தங்களாக
கலக்கமுண்ட
என் நாடியும், நாளமும்
நாற்பதாயிரம் மடங்கு உரங்கொண்ட
பரிமாணங்களாயிற்று.
என் ஆரோக்கியத்திற்கும்
வலிமைக்கும் சான்றுபகர்கிறது.
இதன் பெறுபேறுகள்
அடுத்த சந்திவெளிச் சந்திப்பில்
அதுவரை கும்பிடுபோட்டு
ஆண்டவன் ஆசியைத் தேடு...

உன் தீனி
என் உத்வேகத்திற்கு
துணைபுரிந்ததால்
நன்றி கூறக்கடமைப்பட்டவன் நான்.
நன்றியும் கடனும் பொல்லாதது
நன்றியை இப்பொழுதே கூறிக்கொள்கிறேன்.
கடன் மீள் திரும்பும்
நாள் திரும்பிக்கொண்டிருக்கிறது
பொறுத்துக்கொள்...
பெற்றுக்கொள்ள
தயாராக இரு......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுதந்திரப் பறவைகள்.........

ப. அருள்நேசன்

சிதைந்து போன
நகரத்தின் சில்லில்
ஒட்டிக்கொண்டு உயிர் வாழ்கிறது
ஓர் இனத்தின்
எஞ்சிய விதைகள்.
ஆழ்கூறுகளும் பிடுங்கப்பட்டுவிட்டதால்
அதன் கோலங்களும்
கிறுக்கல்களாய் குமைந்து கிடக்கின்றன.
அவர்களின்
வாழ்வில் பாடலைப்
பறித்துக்கொண்டும்
சுரங்களை சப்பிக்கொண்டும்
வானமதிரக் கத்திக்கொண்டு இருக்கின்றன



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கழுகுகள்.

ஆயானால் சபிக்கப்பட்டு

சாத்தான்களால் அர்ச்சிக்கப்பட்ட

இரத்தமும் சதையுமான

அதே பூமியில் - இன்னம்

நினைவுகள் கனவுகளால் ஆன

சிறகுகளில் மிதந்து கொண்டிருக்கின்றன - கூடுகள்


பறிபோன அவ்வூரின்

சுதந்திரப் பறவைகள்

என்றைக்கோ ஓர் நாள்

வாழ்வு மீட்கப்படாதோ

என்ற ஆதங்கத்தோடு......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கன்னிப்பருவம்.........

ப.சிவபானு

பெற்றோரின் பார்வையில் பாரமாய்
ஆடவனின் பார்வையில் பொழுதுபோக்கு சாதனமாய்
ஊரின் பார்வையில் விமர்சன நூலாய்
பாரதி பார்வையில் புதுமையாய்
சினிமாவின் பார்வையில் வருமான பொக்கிசமாய்
போராட்டத்தின் பார்வையில் சாதனையாய்
சகோதரனின் பார்வையில் பிரச்சினையாய்
உலகத்தின் பார்வையில் எதிர்பார்ப்பாய்
தன்னைப் பொறுத்தவரையில் சோதனைக்குரிய பிறவியாய்
பல பரிமாண விம்பங்களைத் தொடும்
அவளின் பருவம்......
கன்னிப் பருவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதல், காதல் மட்டுமேயல்ல.........!

ஜெ. ஜனனி

என் ஆகாயத்திற்கு
நீலம் தந்து
நிறமிழந்து
நிலவாகியது நீ !

சத்தியமாய் சொல்கின்றேன்
சாத்தியமில்லா மாற்றங்கள் கூட
சித்திரமாய்
சிரிக்கின்றன !
காலின் வழி நடுக்கம் உள்நுழைகையில்
மூளைப் பதிவேட்டில்
உன் முகம்
முறுவலித்து நிலை கொள்ளும்.
எண்ணங்கள் ஏகாந்தமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணிக்கையில்

எதிர்வழியில் உன்

எண்ணங்கள் ஜோடி சேரும்

சுற்றத்துக் காட்டில்

பற்றற்று திரிகையில்

ஒற்றை மைல் கல்லாய் - உன்

வர்ணனைகள் வழிகாட்டும்.

நாற்றிசையும் நகர்வலம்

போட்டாலும்,

உன் திசை மட்டும்

தித்திக்கும்.

மொட்டை மாடியில்

உச்சத்து நட்சத்திரம்

என்னைப் பற்றி உன்னிடம்

சொல்வதாய்

உள்ளுக்குள்

உருவகப் பிரவாகம்...

உன்னைப் பற்றி

பேசுகையில்

குருதியில் குபீரென்று

குற்றாலம் பாயும் !

வெற்றுக்கண்ணில்

வேர் பூட்டி

உற்சாகத்தரு


ஊடுருவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாந்தரையும்
வெட்டாத அலரிப் பூவும்
குட்டிப் பூனையும்
கட்டாக்காலி நாயும்
அவசியமற்று அழகாய் போக
தாறுமாறாகிப் போன உணர்ச்சிகள்.
உன் கண் பார்க்கையில்
உள்ளுக்குள் நாடியும்
நாளங்களும் தமக்குள்
கைகோர்த்து நாட்டியமாடும்
நினைவுகள் !

சவகாசமாய் இருந்து
அசைபோடும் போதுதான்
புரிகிறது !
காதல்,
காதல் மட்டுமேயல்ல......!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அம்மா........!

எஸ். சுடரவன்

ஒரு பெண்.
வர்ணனைக்கப்பால்
நான் வழிபடும் தெய்வம்
விமர்சனமற்ற என் ஆலயம்
வரிகளால் மீட்டிவிட முடியாத என் வீணை
வார்த்தைகளே மௌனிக்கும் வரப்பிரசாதம்

பொறுமைக்குப் பூமி
அதன் சிகரத்தில் என் அன்னை
தடுக்கி விழுந்தபோது
தூக்கியெழுப்பி தட்டிக்கொடுத்த தாரகை
என் வாழ்வின்
அடையமுடியாத வெகுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வைப்புக்களுக்கப்பால்

என்னையே தன் மடி மீது வைத்திருந்த

நான் தேடிய

என்னைத் தேற்றிய

ஒரேயொரு ஜீவன்

வலிகளைத் தாங்க

கேட்ட வார்த்தை அம்மா...

வார்த்தையில்

மூத்தவளும் அம்மா...

வழிபடும்


தெய்வங்களிலும் அம்மா...

எனக்கு ஒரு அம்மா

உன்னிடமிருந்துதான் அன்பு


என் அன்பில் பங்குபோடும்

அக்கா அண்ணன் தம்பிமார்...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகாராவின் புன்னகை.........

ப. அருள்நேசன்

ஒரு மாலைப் பொழுதின்
மழை நனைத்த
நினைவுகள்
மூச்சுக்காற்றின்
உஸ்ணத்தில் காய்கின்றன
நிலவு
துண்டுகளாய் உடைந்து
சிந்திய முத்தங்களில்
மிதக்கிறது எனது புன்னகை...
மனசின்
அலைகளின் உதைப்பில்
கரையொதுங்கிய கனவு
சிறங்கை உணர்வைத் தாங்கி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியோ உயிர்த்துவிட்டதில்
வானம் முழுக்க
அதன் வர்ணங்களை
கிறுக்குகிறேன்
ஒளி தீர்ந்துபோன
இரவொன்றின் உடலுக்குள்
இட்டு நிரப்பமுடியாத
நிலவின் காட்சி
விழிகளை விழிகளே
விழுங்கிக்கொண்டே
கிளறப்பட்டுக் கிடக்கிறது.

என்றைக்கோ
நடைபழகி மறந்துபோன
முட்களின் தெருவில்
தெரிந்துகொண்டே
குதித்து ஓடுகிறது
நெஞ்சுக்குள்ளே இருந்து – ஒரு
குழந்தை.

எப்பொழுதோ
வலித்து ஆறிவிட்ட
எனது காயங்களிலிருந்து
இரத்தம் பீறிட
மீண்டும் எனது புன்னகையை
எழுத ஆரம்பிக்கிறேன் - என்
இரத்தத்தில் மையெடுத்து...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சமே ! என்ன வழி உனக்கு...

க. சிவமைந்தன்

நெஞ்சமே
கொஞ்சம் நினை !
பட்டாகி
பாலாகி
பூவாகி
விட்டென்று தெறித்த அம்பாகி
சுள்ளென்று எரித்த கதிராகி
சட்டென்று சடைத்த மரமாகி
சில்லென்று தைத்த குளிராகி
திசையெல்லாம் திரிந்தோம்

வில்லங்கமாய் வந்த
விதியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதானிக்க நிமிடமில்லாமல்
நிலைகுலைகிறோம் !
மொட்டறுந்த செடியாய்
வேரறுந்த மரமாய்
தெருவோரமெங்கும் சல்லடையானோம்

மணந்த முல்லைகள்தான்...
அதையும் மறந்து விழுங்கிறோம்
தேர்கள் மட்டுமல்ல,
பாரிகள் கூடத்தான்
வாரி எறியப்படுகிறார்கள் !

எம் ஊரின் அந்திகளுக்கெல்லாம்
பின்னிரவைக் கடந்துவிட்ட முதிர்ச்சி !
தேசமே, சொட்டுச்சொட்டாய்
மரணிக்கையில் மனவெளியெல்லாம்
வேதனைப்பூ
வரிந்து கட்டிக்கொண்டு
விரிந்து விடுகிறது.
சுற்றித்திரிந்த
வெளியில் பற்றி எறியப்பட்டு
பகிரங்கமாய் ஒடுக்கப்படுகையில்,
நெஞ்சமே !
பஞ்சமில்லாமல் இருக்கும்
நேற்றைய பசுமைகளை
நினைப்பதைத் தவிர
வேறு என்ன வழி
உனக்கு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விருப்பமில்லாத விதி........

ஜெ. ஜனனி

இரவுகளின் ஒருமித்த ஆட்சியில்
அடங்கிப்போயின உணர்வுகள்.
உயிர்கள் கூட,
உயிர்ப்பு இருப்பதைக் காட்ட
தயங்கும் சாமங்கள்......

கணங்கள் எல்லாம்
பூதகணங்களாய் மாறி
உடலில் இருந்து உயிர் பிடுங்கும்
உள்ளார்ந்த வலி
கண்கள் மூடாது கொட்டக்கொட்ட
விழித்திருந்து இருளுக்கு
காவல் காக்கின்ற பரிதாபம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தி கவிழவே

நெஞ்சத்தில் நெருப்புப் பிடித்த பரபரப்பு

குந்தியிருந்து குருதி குடிக்கும் !

தூரத்து ஒலிகளையும் துடைத்தெடுத்து

காதினுள் விழுத்தி

பலவிதமாய் பயம் கொண்டு

சலசலப்பில்லாது

சரிந்து படுக்கும் நிலைக்கும் !

இறுதியில் தூக்கம் அணைக்கையில்

நிச்சயமற்ற விடியலில்...

இங்கேயோ ! எங்கேயோ ! என

விக்கித் தவித்து விடைகாணாமல்

ராத்திரியின் ரபான்கள் வெருட்டுகின்ற இரவில்


வீட்டுச்சுவரினை தடவி

குருட்டுக்கவிதை படித்து

விருப்பமில்லாமல் விழி மூடும்


விதி கொண்ட

தமிழா !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேரோடும் துயரம்........

எஸ். சுடரவன்

குழப்பங்களின் கூடாரமாய்
நிம்மதி மறைந்து
நீண்ட நாட்களாகின்றன...
கிறுக்கிய வரிகளெல்லாம்
குப்பைத் தொட்டிக்காரன்
சொந்தம் கொண்டாடினான்;
என் கரங்கள் ஸ்திரமிழந்து ஸ்தம்பித்தது...

ஓ !
நீண்ட தூரம்....
நெடும் பயணம்....
கண்களின் காட்சிகள்
கானல் நீராகிக் கிடந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரம் நடக்க மறுத்து
மண்டியிட்டன என் பார்வைகள்....
துளைகளையிட்டு
மண்ணை நோக்கின என் கால்கள்..!
பிறிதொரு தலையாக
தடுமாற்றம்
தலை நிமிர்ந்து நின்றது.
வறட்சி கூடவே
கூடாரம் அமைத்து
தூங்கிக் கொண்டது.
நொடிப்பொழுதுகள் எல்லாம்
அழுகை வந்தது.
கண்கள் நீர்த் துளிகளை
சிந்த மறுத்தன.
வறட்சி கண்களிலும் நிலவிற்று.
செத்துப் போய்
சடமான உணர்வானேன்...

சா(சூ)ட்சியானவர்களே.. ளே.. ளே.. .. !
ஏன் சான்று பகர மறுக்கின்றீர்கள்?
இல்லை!
மாற்றானல் மாறாக
மனச் சாட்சியால்
மறுக்கப்படுகின்றீர்கள்......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலாசாரக் கழிவுகள்..........


எஸ். குமரேசன்

இனம் புரியாத
ஏதோ ஒன்று
அடி மனதில் இருந்து
அடாவடியாய் எழுந்து
இதயத்தின் கருத்தை
இறுக்கி நெரிக்கிறது...
வெளியில் சொல்ல முடியாத
வலியுடன்
மௌனமாய் இதயம்
அலறி துடிக்கிறது.
இதயத்தின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதி மூச்சுக்களாய்
என் பெரு மூச்சுக்கள்
தீப் பிடிப்புக்களின் உஷ்ணமாய்
வெளியே
இந்த வெப்பத்திலாவது
வெந்து போகுமா
மூட கலாசார கழிவுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிஜம் காணாத வரலாறும் அர்த்தமற்ற வாழ்வும்.........

ப. அருள்நேசன்

கூடு சிதைந்து
திசைகளில் வீசப்பட்டன
குருவிகள்.
வாழ்வின் வலிபுரியா
சின்னஞ் சிறுசுகளின்
தோள்களிலும் மனசிலும்
வலி சுமந்து...
எதிர் காலத்தை
இப்பொழுதே சுமக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரானதில்

சில பருவங்களை காணாமலே

கடந்து விட்டோம்.

நியாயமே இல்லாமல்

நிர்ப்பந்திக்கப்பட்ட

காலத்தின் தேவைகள்

இரக்கமற்று

சாட்டை வீசிக்கொண்டிருக்கின்றன.

எம் இளையவர்கள் மீது.

இது போகட்டும்

நம் இன்னொரு சந்ததிக்கு

அநியாயங்களின்

நிஜம் காணாத - வசீகர

வரலாறாய்


சமர்ப்பிக்கப்படப்போகிறது.

நம் வாழ்வு

என்றெண்ணும் போதுதான்

அது

அர்த்தமற்றுப்போகிறது...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனனம்

ப. இந்துஜா

முற்றவெளி
மூங்கில் காடுகளின்
முணுமுணுப்புக்கள்...
காற்று
கவிதையாக வீச...
வார்த்தை வர
மறுத்து...
மௌனம்
நிசப்தமான வெளியில்...
இலைகளின் உரசல்
உறக்கம் வெகு தொலைவில்...
விழிகள் உறங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதுகள்
விழித்துக்கொண்டன...
மௌனத்தின்
இராகத்தை
இரசித்தபடி காதுகள்...

இதயத்தின் ஆழத்தின்
சிறு இடி மின்னல்
மழை - பின்
பனிச்சாரல்
இளவேனில்
அந்தரங்கம்...
அது ஓர்
அழகிய அரங்கம்...

விழிகளும் விழிகளும்
ஓர் நொடி
நினைவில்
முட்டி மோதிக்கொண்டன...
இதயத்தின் அடியில்
ஓர் சுனாமிப்
பேரலை...
ஆன்மாவில் ஓர்
அதிசய நடுக்கம்...
காதலின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனனம்...

இனிமையான ரணம்...

மறக்க முடியுமா மறுபிறவி...

விழிகள் மூடிக்கொண்டன...

கனவுகள் ஓடி வந்தன...

கவிதை முடிந்துவிட்டது...

அதனால்

வார்த்தைகள் மௌனித்துக்கொண்டன......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேடந்தாங்கல் ........


எஸ். குமரேசன்

பலவித பறவைகள்
பல்வேறு
வேடந்தாங்கலில் இருந்து...
கூடி வாழ்ந்த
கூடுகளைப் பிரிந்து...
நீண்ட தூரம் பறந்து
ஒன்றாய்க் கூடின இங்கு...
சில சில
முறுகல்கள்
பல பல முறுவல்கள்
இவற்றுடன்
பந்த பாசங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவுகளை மறந்து
பாசமாய் பழகுகின்றன
மனம் திறந்து...
இன்னும் நான்கே நொடிகளில்
நான்கு வருடங்கள்
பறந்துவிடும்
பல திசைக்கும்
பறவைகள்
பறக்கும் நேரம்
வரும்
அன்று
கண்களின்
கண்ணீர் மழையை விட
வேறு
என்ன வரும்...........?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒளி தரும் உயிர்த் திரி.........

எஸ். சுடரவன்

எழில் கொண்ட
உந்தன் திருமேனி
தீக்கிரையாவதனால் -
எனக்குள்ளே உண்டான
உத்வேகம்
வரப்புக்களைத் தாண்டி
வானத்தின் எல்லைகளுக்கப்பால்
சிறகுவிரித்து நிலைகொண்டது...

உன் பிறப்பு,
உடன் பிறந்த எங்களுக்கு,
வழி பிறக்குமென
ஒளி தருமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் எண்ணங்களின் சிதறல்கள் பீறிட்டால்
இடையூறு என்ற வார்த்தைக்கு
என்னிடம்
இடமே இல்லை.
உன்னால் முடிந்தவற்றையெல்லாம்
எனக்காகச் செய்கின்ற - உனக்கு
பரிகாரம் செய்வதற்கு
என்னிடம் எதுவுமேயில்லை.
அதை நீ எதிர்பார்க்கவுமில்லை.

சுட்டெரிக்கும் உந்தன்
சூரியப்பார்வைக்கு முன்னால்
சின்னப் பெடியன் நான்
சிதறிடுவேனென்ற கிலியால்
தூரம் விலகியே நிற்கின்றேன்
அங்கிருந்தே உன்னை
உற்றுநோக்கின்றேன்.
உன்னிப்பாகக் கவனித்துக்கொள்கிறேன்.
உன் கண்ணீர்த் துளிகள்
தரையைத் தொடுகின்றபோதும் -
வைராக்கியத்தின்
வெளிப்பாடாக
தோற்றம் தருகிறது.
மீளவும் உன் மீட்சியான
எழுச்சிக்கு
அவை சாட்சி பகர்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று

முதுகெலும்பு பொருந்திய என்னை

மூத்தோர்கள் தோள்களில் தூக்கி

ஆரவாரித்த நாளிகையால்

ஆனந்த வரிகள்

நாட்குறிப்பை நிறைத்துக் கொண்டது.

இன்றைய பொழுதுகளில்

அர்த்தம் புரியாது

அதற்கு அருகதையற்று

அடுக்கடுக்கான கேள்விகள்

என் மனத்திரையில்

தினம் ஓடிக்கொண்டிருக்கிறது...

ஓ அற்பனே !

என்ன பார்க்கிறாய் என்ற

ஏளனப்பார்வை

உன் சுழன்றடிக்கின்ற கீற்றுக்கள்

தினம் சொல்லுகின்ற

கதைகளாகவே கழிகின்றன


இராத்திரி வேளைகளில்

உன்னோடான

இரகசிய சந்திப்புக்கள்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடுத்த வாசல்.........

ப. அருள்நேசன்

என் வீடு தூரம்
அன்பு தூரம்
ஆசைகளும் தூரம்
உணர்வுகளின் எந்தத்தேவையும்
சீராய் சரி செய்யப்படாமல்...
என்னுள் நான் தூரம்
என் கண்களில் என்னை நான்
பார்க்கின்றேன்.
ஒரு கண்ணாடி
உணர்வுகளையும் எத்தனையோ
உண்மைகளையும்
அதுபோல் போலிகளையும்
அன்பையும் காதலையும் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படிச் சொல்லும்.

கண்களை மூடி நான் மௌனிக்கிறேன்

எத்தனையோ போரின் சத்தங்கள்

ஏதேதோ இரைச்சல்கள்

எனக்குள்ளே ஒலிக்கத் தொடங்குகின்றன.

நியாயங்களையும் - சரி பிழைகளையும்

கூறித் தீராத ஆயிரம் கேள்விகள்.


அவற்றுள்ளே - ஒரு

நிமிடங்கூட

தாங்காமல் மௌனம்


கலைகிறேன் - அர்த்தமே இல்லாமல்

ஏதேதோ பேசி......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எனது பட்டப்படிப்பு.........

எஸ். குமரேசன்

புதிய கிரகத்தில்
புகுந்த மனிதனாய்
மூச்சை இறுக்கிப் பிடித்தபடி
முன் வாங்கிலில்
முழுசியபடி இருந்த ஞாபகம்
வந்து போனது
சின்னக் குவியல்களின்
ஆரவார சங்கீதங்கள்
வகுப்பறை சுவர்களில் - இன்னும்
தெறித்துக் கொண்டிருந்தது
பட்டாம் பூச்சியாய்
நாம் பறந்து திரிந்த
மைதானத்தில் கால் வைத்தபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்களின் கீழ் - அது
நழுவிப் போனதாய்
ஒரு உணர்வு
ஆரவாரித்த
நண்பிகளின் கரவொலிகள்
மத்தள சங்கீதமாய்
ஒலித்து மறைந்தன...


சின்ன சின்ன சண்டைகள்
சினேகிதமே பரிந்த சண்டைகள்
குளறுபடிகள், குழப்பங்கள்
வேதனைகள், சாதனைகள்
எல்லாமும் வரிசையில்
முண்டியடித்து வந்தன...

கடந்து போன - இன்ப நினைவுகள்
வலிகளாய் வாட்ட
துன்ப நினைவுகள்
ஆறுதல் சொல்ல
விரைந்து வெளியேறுகிறது
கண்ணீரில் ஒரு கனவு......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூக்கம்.........

எஸ். சுடரவன்

தூக்கம் !
மனிதனின் நாளைய பொழுதிற்கான
இன்றைய தயார்ப்படுத்தல்கள்....

தூக்கம் !
கற்பனை உலகத்தோடு
கதைபேசும் கணப்பொழுதுகள்...

தூக்கம் !
எதிரியின் பயம் மறந்து
இளைப்பாறும் போர்க்களம்...

தூக்கம் !
குழந்தையின் அழுகைக்கு
நிறுத்தற்குறிப் புள்ளி...
தம்பி !
நீ நன்றாகத் தூங்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையின் தூக்கம் நீண்ட நிம்மதி...

அன்னையின் தூக்கம் பிள்ளையின் எதிர்காலம்...

தந்தையின் தூக்கம் தாங்கி வாழும் குடும்பம்...

ஆண்டவனின் தூக்கம் படைப்பின் காவல்...

காவலனின் தூக்கம் கடமையில் எச்சரிக்கை...

காதலனின் தூக்கம் காதலியின் நாளைய சந்திப்பு...

வைத்தியனின் தூக்கம் துன்புறும் நோயாளி...

மாணவனின் தூக்கம் ஆராய்ச்சி...

பணக்காரனின் தூக்கம் வியாபாரம்...

ஏழையின் தூக்கம் அதிகாலை...

அன்னை வயிற்றில்
அடங்கியிருந்தபோதும்
மனிதர்கள்
தூங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள்...
ஆண்டவன் மடியில்
அணைக்கப்பட்டபோதும்
அவர்கள்
தூங்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள்...

நீ தூங்கு - ஆனால்
உனது தூக்கம்
நாளைய விடியலுக்கான
இன்றைய
அலாரமாக இருக்கட்டும்......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரணித்துப் போகாத மரணம்.........

எஸ். சுடரவன்

உன்னை
வணங்கியபோதும்
அவன் கூக்குரல்கள்
செவிசாய்க்கப்படாது
சாக்குரல்கள்
ஒலிக்கப்பட்டு
சங்கீதக் கச்சேரி
முழங்கும்படி
சபித்த - உன்
பெயர்தான்
சாத்தானா......?

அவன் பிறப்பு
எதுவென
அவனே அறியுமுன்னே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்துச்சென்ற
சுமாத்திராவில்
உருவான — உன்
பெயர்தான்
சுனாமியா......?

மறு வாழ்வு
பற்றிய பேச்சுக்கள்
உன் வாழ்வின்
திரைவசனமாக
வெளிவருகின்றன.
பாவம்
கொடுத்த வாழ்வையே
பறிக்க வந்த
பாண்டவர் கதை
உன் பெயர்தானா......?

தரப்பட்ட காலமும்
கொடுக்கப்பட்ட பணியும்
முடிந்ததென
காலத்தைக் கணிக்கும் - உன்
பெயர்தான்
கண்காணியா......?

குழந்தை
முலை முட்டி
புழுதிவாரிச் சொரிந்து
தத்தித் தவழ்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபழகி

நாலு வார்த்தை பேசி

பத்துக் காசு சேர்க்க

படிப்பினை சொல்லும் - உன்

பெயர்தான்

வழிகாட்டியா......?

குழப்பத்தின் கூடாரத்தில்

சாத்தான்...

கடல் அன்னையின் சீற்றத்தில்

சுனாமி...

பரிதவிப்பில்

பாண்டவர் கதை...

இலட்சியத்தின் திசைகாட்டியில்

வழிகாட்டி...

எத்தனையோ கேட்டுவிட்டேன்

சலனமற்று கிடக்கிறாயே...

முடிவிற்கு

முனைகிறேன் - என்

மனதிற்குப் பட்டவரை

நீதான்

மரணித்துப் போகாத மரணம் என...

அது முதல்

மௌனித்துக்கொள்கிறேன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடலின் மக்கள்.........

ப. அருள்நேசன்

வானம் பார்த்தபடி
மல்லாந்து கிடக்கிறாள்
கடல் இராட்சசி
வார்த்தைகளற்ற மொழியின்
சங்கீதம்
கரையின் நீளத்திற்கும்
கேட்டுக்கொண்டேயிருக்கிறது
அலைகளின் கரங்களால்
தழுவிக்கொண்டேயிருக்கிறாள்
தன் மக்களை.
அவர்களுக்கு
கடலே தாய்
கடலே காதலி
கடலே சொந்தம் இன்னும்
அவளே தெய்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களிடம் கண்ணீர் இருக்காது
கவலை இருக்காது - ஆனால்
அவர்களின்
அழுகைக்கு ஆறுதல் சொல்லும்
புன்னகைக்கு வலுச் சேர்க்கும்

அந்த நாள்
அவளுக்கு என்ன துயரமோ...
என்ன கோபமோ...
என்ன நோய் தொற்றிக்கொண்டதோ...
இல்லை யார் மீது மோக வெறியோ...
அலைச்சேலையை
அவிழ்த்தெறிந்து அம்மணமானாள்
தலைவிரித்து கரைக்கேறி
தாண்டவமாடினாள்
தன் மக்களைத் தின்று
சக்கை துப்பினாள்
பூமியின் முதல் கர்ப்பம்
கலைந்து
சிதைந்து கிடந்தது
கரையெங்கும் பிணங்கள்...

முதன்முதலாய்
அலைகளையும் மீறிற்று
உலகின் ஒப்பாரிக் குரல்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முதன்முதலாய்
பூமியே அழுதது
ஒருமுறை

சாதி
மதம்
இனம்
ஒன்றாகச் செத்துக்கிடந்தது

அவர்களின் சமாதிகள் மீது
மலர்ந்திருந்தது
மாசற்ற மனிதநேயம்
அத்தனை வலிகளையும்
வேதனைகளையும்
மெதுவாய் வருடிக்கொண்டு...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இருப்பிடத்தை நோக்கிய பயணங்கள்.........

எஸ். சுடரவன்

இழந்துவிட்ட
இருப்பிடத்தை நோக்கி
சிதைந்த கால்களுடன்
நடந்துகொண்டிருக்கிற
எனது இருப்பிடங்கள்
எப்பொழுதோ
இடம்பெயர்க்கப்பட்டுவிட்டன.

அதோ
அங்கேதான்
என் வீடு
அதற்கருகில் வாழைத்தோட்டம்
கூடவே தண்ணீர் பாய்ச்சும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துருசும் துலாவும்

ஆகா

பச்சை வயல்களின்

மெல்லிய சந்தம்...

என் காதுகளைக் கூர்மையாக்கிக்

கொண்டே நகர்ந்தேன்.

சந்தனக் குச்சிகளிற்குப் பதிலாக

அங்கே கந்தகக் குச்சிகள்

புதைக்கப்படாது

எரிக்கப்பட்ட

வயல்களின்

இறுதிக்கிரிகையில்

பங்கேற்றன...

தோட்டத்து வெருளியை

நோக்கி நடந்தேன்.

தோட்டாக்கள்

பரவுண்டு கிடந்தன.

மெல்லிய ரீங்கார இசை

கொடுக்கும் ரிபன்களின்

சத்தத்தில்

ஆட்டுக்குட்டியின் அழிவிற்காக

ஊளையிடும் ஓநாய்கள்

என் மனத்திரையில்

ஓடி மறைந்தன.

ஓசோனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விட்டம் கூடிய
வட்டங்கள் தோன்றிவிட்டதாக
விஞ்ஞானம் சொல்லிக்கொண்டிருந்தது.
இதனால் உண்டான
சூரியக்கதிர்கள்
என் மேனியில்பட்டு
உழைப்பை
உறிஞ்சிக் கொண்டு
இருந்தது.
நிழல் தேடி
மரம் நோக்கி நகர்ந்தேன்.
நீண்ட காலத் திட்டத்தின்
தீர்மானத்தால்
மரங்களெல்லாம்
தறிக்கப்பட்டு
துண்டுபோடப்பட்டுவிட்டன.

வட்டமடித்திட்ட
வண்ணத்துப் பூச்சியொன்றைப்
பிடித்துக்கேட்டேன்
எட்டடியென
இனிமை மொழி பேசி......
மகரந்தங்களைத் தேடி
மாதங்களாக அலைந்து
சோர்ந்துபோன இறக்கைகளின்
சோகத்தைச் சொல்லி
செப்பிய வார்த்தைகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


செல்லாக் காசாக்கிற்று...

நிஜங்களை நோக்கி
பயணத்தை திருப்புகிறேன்
உனக்கு மகரந்தம்
எனக்கு மனை
உன்னிடம் மடிந்த இறக்கைகள்
என்னிடம் உடைந்த கால்கள்
இருப்பினும்
இருப்பிடம் நோக்கியே
இருவரின் பயணங்களுட
தொடருகின்றன...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வண்ண மழையே.........

ஜெ. ஜனனி

சின்ன தூறலாய்
சிந்திய முத்துக்களாய்
வானமங்கையின் பிரசவத்தின்
குழந்தை துளிகளாய்
விழுகின்ற மழையே !

பூமியை தொட்ட
லட்சியம் நிறைவேறுகையில்
குதூகலித்து குற்றாலம் போல்
குளிர்மையாய்
பரவுகிறாய் !
பூமித்தாயும் புதுமணம் பரப்பி
நீ இறைத்த சந்தோசத்தில்
நனைந்து செழிப்பாகின்றாள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டி உயரும் தென்னையும்
குட்டியாய் வளரும் குறோட்டனும்
உன் சாரலினை தம்
தளிர் கரங்களால் ஏந்தி
தாய் வேருக்கு தகவல்
அனுப்புகின்றன.
தகவல் கேட்ட வேர்களில் கூட
முத்துப் பற்கள் முறைத்து
சிரிப்பெழும்புவதாய் கேள்வி !

வண்ண மலர்களும்
வரிசை இதழ்களை காட்டி
பூப்படைந்தவர்கள் போடும்
புதுக்குளியல் போல
மோகனித்து முழுகுகின்றன !

கட்டிடங்களை எல்லாம்
தழுவிக் கழுவியபின்
வழிந்த துளிகள்
சிறுவெள்ளமாய் சிதறி ஓடும்
அதில் விழும் கன்னித்துளிகள்
'குபிக்' என்று
குமிழெடுத்துச் சிரிக்கும் !
தெறிக்கும் !


தொட்டில் குழந்தையின்
திமிறலாய்
விட்டில் பூச்சியின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாப்பிடியான தாவுகையாய்
தொட்டும் தொடாமலும் போன
காதலியின் கன்னச்சிவப்பாய் . . .
சொட்டுச் சொட்டாய் கதை சொல்லும்
பாட்டியின் களஞ்சியமாய் . . .

மழையே !
வருகிறாய் விழுகிறாய்
தொட்டும் தொடாமலும்
பரவுகிறாய் !
மழையே நீ ஒரு
ஜென்மத்தின் குளிர்ச்சி !
பல கர்ப்பங்களின் ஒருமித்த
பிரசவம் !





# என் கடவுளைத் தேடுகிறேன்........

எஸ். சுடரவன்

கடவுள் யாரென
கடவுளைப் பார்த்துக் கேட்கிறேன்
அப்பிள் பழத்தைத் திண்ற
ஆதாம் நான் தான்...
வாழ்க்கையில் பாவங்களைச் செய்தேன்
பாவமே என் வாழ்க்கையானது

சபிக்கப்பட்ட
சாத்தானின் வடிவமாய்
மனிதக் கண்களைத் திறந்திடவென
முளைத்த பாம்பை
சபித்த கடவுளைச் சந்தித்தேன்...
மாலையாக மடிமீதிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்துவரை நீட்டி
தொங்கப்போட்ட - பிறிதொரு
கடவுளையும் சந்தித்தேன்...
கடவுளைப் பார்த்துக் கேட்கிறேன்
என் கடவுள் யாரென...?
விடைகளைக் காண முடியவில்லை
விளக்கங்களும் விளங்காமலே
காலங்கள் கழிகின்றன...


உயிர் பலி கேட்கிறான்
கடவுளென
படிப்பறியா ஜீவனெல்லாம்
பலிக்கடாவாக்கப்படும்
கொலைக்களத்தில்
வீற்றிருக்கும் வேறொரு
கடவுளையும் சந்தித்தேன்.

தாய் மரணித்துப் போக
தாய்ப் பால் ஊட்டிய கடவுளே !
தொண்ணூற்றொன்பது ஆடுகளையும்
புல்வெளியில் விட்டுவிட்டு
தொலைந்து போன குட்டியைக் காண
தொலைதூரம் போன மீட்பரே !
உங்களிடம் இருக்கின்ற உறவுமுறை
உறங்கிக்கொண்டிருக்கின்ற
எங்களுக்கு விளங்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து வந்த அனுபவத்தில்
கடல் ஒன்றுதான்
ஊருக்கும் பேருக்குமாக ஒவ்வொரு பெயர்.
என் கடவுளும் ஒன்றுதான்
உனக்கும் எனக்குமாக வெவ்வேறு பெயர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பின் பிரிவில் சில கணங்கள்...

க.சிவமைந்தன்

விடைபெறும் பொழுதுகளில்
விடைதெரியா என்கேள்விகளுக்கு
விடைசொல்லு என்நண்பா!

வாழ்க்கைக்கு
வழிதேடும் பயணத்திற்கு விலையாக
நம் நட்பு ஆகிவிட...

நாற்பது திங்கள்
நண்பராய். சகோதரராய்
நாமிருந்த நாட்கள்- இனிச்சில
நிமிட நினைவுகளாக மட்டும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நிமிடமது
சுமந்து வரப்போகும்
சுகமான சுமைகள் மட்டுமே...
நம் நட்பின் சுவடுகளாக

பிரிவின் துயரம்
சாரலாய்.... தூறலாய்......
கண்ணீர் துளிகளாய்
சில பொழுதுகளில் சுனாமி அலைகளாய்....

பிரிவுகள் நிரந்தரமாகிவிட்டாலும்
நட்பின் விழுதுகள்
வேரூன்றி நிலைத்துவிட
அறுக்கமுடியா உறவுகளாக....

பிரிவின் வேதனைகள் ரணங்களாக
மீள் சந்திப்புக்கள் கேள்விக்குறிகளாக. அதற்கு
பதில்கள் விடுகதைகளாக....

ஆனாலும்...

உன் நினைவலையில் என்னையும்
இணைத்துக்கொள் நண்பா.....
உன்நினைவில் வருவதற்காய்
காத்திருப்பேன் எப்பொழுதும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org